### “அதிகார போதையில்” மகுடி வாசித்துக்கொண்டிருக்கிறார் முதல்வர் விஜய்! எதிர்க்கட்சித் தலைவர்

# உதயநிதி ஸ்டாலினை கைது செய்திருப்பது ஆணவ அடக்குமுறை!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் கடும் கண்டனம்!

சென்னை, ஆக. 5-

**“அதிகார போதையில் மறந்து, மகுடி வாசித்துக்கொண்டிருக்கும் முதல்வர் விஜய் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்திருப்பது ஆணவத்தின் உச்சம்” என்று கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள கண்டன அறிக்கை வருமாறு:-

பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கவுள்ள நிலையில் அவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை எதிர்கொள்ளத் துணிச்சலற்ற கோழை த.வெ.க. அரசு காவல் துறையை ஏவி அவரைக் கைது செய்துள்ளதற்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்று தஞ்சையில் விவசாயிகளுக்காகக் கழகம் எழுப்பிய கோரிக்கைகள் குறித்து வாய்திறக்காத அரசு, அந்தப் போராட்டத்தின் எழுச்சியைப் பார்த்து தொடை நடுங்கி, ஜனநாயகத்தின் முக்கியத் தூணான எதிர்க்கட்சித் தலைவரையே அடிப்படையற்ற பொய் வழக்கில் கைது செய்துள்ளது அராஜகத்தின் உச்சகட்டம்! மிக மோசமான ஜனநாயகப் படுகொலை!!

**அவசர அவசரமாக கைது செய்வது ஏன்?**

முதலமைச்சர் விஜய் தனது “Apprentice” ஆட்சியில் சரியும் சட்ட ஒழுங்கு, மாநிலம் முழுவதும் மக்களை வாட்டும் மின்கட்டணப் புகார்கள், விவரம் இல்லாத அமைச்சர்கள் அடிக்கும் கூத்துகள், “இம்” என்றால் சிறைவாசம் என்ற ஆணவத்தைப் பிரதிபலிக்கும் அடக்குமுறைகள், பாலியல் வழக்கு



களில் அடுத்தடுத்து சிக்கும் த.வெ.க. நிர்வாகிகள், எல்லாவற்றுக்கும் மேல் டெல்டா விவசாயிகள் கண்ணீர் சிந்த வைக்கும் காவிரிப் பிரச்சினையில் முதலமைச்சரின் மவுனமும் மெத்தனமும் என எதிர்க்கட்சித் தலைவர் நாளை (இன்று) தொடங்கும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் எழுப்பவுள்ள கேள்விகளுக்கு இன்றே அஞ்சி நடுங்கி, தஞ்சாவூரில் பேசாத ஒன்றைப் பேசியதாகப் புனைந்து, கற்பனைக் குற்றச்சாட்டின் அடிப்படையில் எப்.ஐ.ஆர் ஒன்றைப் போட்டு, உயர்நீதிமன்றத்தின் அறிவுறுத்தலையும் மீறி அவசர அவசரமாகக் கைது செய்துள்ளது அடாவடி த.வெ.க. அரசு!

கொடுங்கோல் ஆட்சியின் அலங்கோலத்தினை அரங்கேற்ற இந்த அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். பாசிசத்தின் உச்சகட்டமாக எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பொய் வழக்கில் கைது செய்துள்ள முதலமைச்சர் விஜய் இப்போது நடத்தி வருவது தி.மு.க. கூட்டணியிடம் இருந்து கடன் வாங்கிய கட்சிகளுடன் ஆதரவிலான ஆட்சி என்பதை ஏனோ “அதிகார போதையில்” மறந்து, மகுடி வாசித்துக் கொண்டிருக்கிறார். முதலமைச்சர் விஜய் இப்படியெல்லாம் தி.மு.க.வையும் மிரட்ட முடியாது. எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் அச்சுறுத்த முடியாது.

நாங்கள் இதையும் சந்திப்போம், எதையும் சந்திப்போம்! சட்டப்பேரவையில் பதில் சொல்லாவிட்டாலும் மக்களுக்கு இந்த அரசு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்!

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### கைதுக்கெல்லாம் பயப்படக்கூடிய ஆள் நான் அல்ல! நான் கலைஞரின் வளர்ப்பு!

# சட்டப்படி வழக்கைச் சந்திப்பேன்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

சென்னை, ஆக.5-

**“கைதுக்கெல்லாம் பயப்படக்கூடிய ஆள் நான் அல்ல! நான் கலைஞரின் வளர்ப்பு! சட்டப்படி வழக்கைச் சந்திப்பேன்” என்று தான் கைது செய்யப்பட்டபின் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உறுதிபடக் கூறினார்.**

கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:-

“த.வெ.க அரசின் இந்த கைது நடவடிக்கையை நான் காமெடியாகத்தான் பார்க்கிறேன். கிட்டத்தட்ட 22 நிமிடங்கள், நான் தஞ்சையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பேசினேன். இந்த அரசு, எப்படி எல்லாம் விவசாயிகளை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது, தேர்தல் வாக்குறுதியில் சொன்ன ஒன்றையும் செய்யவில்லை, விவசாயிகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றவில்லை என்றெல்லாம் பேசினேன்.

மேகதாது அணை கட்டுவதற்கு எதிராக, இந்தத் திராணியற்ற, தெம்பில்லாத, பயந்தாங்கொள்ளி அரசு, எதற்குமே குரல் கொடுக்க மறுக்கிறது. இவற்றையெல்லாம் எதிர்த்து முதலமைச்சர் பேச வேண்டும்.

**ரீல்ஸ் வெறி முற்றிப்போய்விட்டது!**

விவசாயிகளோடு திராவிட முன்னேற்றக் கழகமும், எங்கள் தலைவரும் என்றைக்கும் துணை நிற்பார்கள் என்று அந்த ஆர்ப்பாட்டத்தில் நான் பேசினேன். அவற்றையெல்லாம் மறைத்துவிட்டு, இந்த த.வெ.க. அரசு வெறும் திசைதிருப்பும் தந்திரங்களை (Diversion tactics) மட்டும்தான் பயன்



படுத்திக் கொண்டிருக்கிறது.

ஏதேனும் ஒரு பிரச்சினை என்று வந்தால், அதிலிருந்து திசைதிருப்புவதற்கு, தினமும் டம்மி முதலமைச்சர் ஏதேனும் ஒரு ரீல்ஸ் பதிவிட்டுக் கொண்டு, முதலமைச்சர் மட்டும் அல்ல, முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் வெறும் ரீல்ஸ்களில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ரீல்ஸ் வெறி முற்றிப்போய், அனைவரும் ரீல்ஸ்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனைக் கண்டித்து நான் பேசினேன்.

**பொய்ச் செய்தியைப் பரப்புகிறார்கள்!**

அதைத் திசைதிருப்புவதைப் போல, இன்றைக்கு நான் பேசாத ஒன்றை பேசியதாகக் கூறி, வெட்டி ஒட்டி (Cut, Copy, Paste), பொய்ச்செய்தியைப் பரப்புகிறார்கள். இந்தக் கட்சி தொடங்கி, இந்த இரண்டரை ஆண்டுகளில் எதில் வல்லவர்கள் என்றால், வெறும் வெட்டி ஒட்டுவது, போலி ரீல்ஸ்களைப் பரப்புவது, இவற்றில் மட்டும்தான்.

இதன் தொடர்ச்சியாக இன்றைக்குப் பொய் வழக்குப் பதிவு செய்து, என்னைக் கைது செய்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் பயப்படக்கூடிய ஆள் நான் இல்லை. கலைஞருடைய வளர்ப்பு நான், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உடன்பிறப்பு. எங்களுடைய தலைவருடைய வளர்ப்பு நான். நான் மட்டும் இல்லை, தி.மு.க.வின் கடைசித் தொண்டன்கூட இது போன்ற கைதுகளுக்கெல்லாம் பயப்படக்கூடிய ஆள் இல்லை. இதைச் சட்டப்படி நான் சந்திப்பேன்”

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் பேட்டி அளித்தார்.

---

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது !

# போராட்டக் குரலைக் கண்டு அஞ்சி நடுங்குகிறார் முதல்வர்!

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கடும் கண்டனம்!

நெல்லை, ஆக.5-

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

சட்டமன்றம், நாடாளுமன்றம் நீதிமன்றம் என எல்லா தளங்களிலும் காவிரி பிரச்சனைக்காக குரல் கொடுத்த தி.மு.கழகம் டெல்டா மாவட்ட விவசாயிகளுக்காக லட்சக்கணக்கான விவசாயிகள் கலந்து கொண்ட தஞ்சைப் போராட்டத்தை தலைமையேற்று நடத்திய எதிர்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் போராட்டக் குரலை கண்டு அஞ்சி, நடுங்கி அடக்கி ஒடுக்க நினைக்கும் முதல்வரை வன்மையாக கண்டிக்கிறேன்!

தமிழ்நாட்டில் ஒருபுறம் தி.மு.க. சார்பில் விவசாய போராட்டம் மறுபுறம் காவிரி தாயிடம் ஆடி பெருக்கு கொண்டாட வந்த தம்பதிகள் நீரின்றித் தவித்த நிலையில் உங்கள் நீர்வளத்துறை அமைச்சர் பாண்டிச்சேரி புஸ்ஸி ஆனந்த் சென்னை அ.தி.மு.க. மாவட்ட செயலாளரை கோட்டைக்கே அழைத்து த.வெ.கவில் இணைத்தது உங்களுக்கு



வெட்கமாக இல்லையா?

RSS அரைக்கால் காக்கி டவுசர் அமைச்சர் தி.மு.க. தலைவரை கர்நாடக முதல்வரோடு தொடர்பு படுத்திப் பேசியதை கண்டிப்பதோடு CM sir உங்கள் “ஜனநாயகன் “ பட தயாரிப்பாளரும், தமிழகத்தின் டெல்லி பிரதிநிதியும், கர்நாடக முதல்வரின் நெருங்கிய நண்பருமான பெங்களூர் வெங்கட் நாராயணா, “ஜனநாயக” பட தயாரிப்பிற்கு கர்நாடகமுதல்வரிடம் நிதி பெறவில்லை என்பதை உறுதிபடுத்துவீர்களா? அந்த நன்றிக்காகதான் கர்நாடக முதல்வருக்கு எதிராகவோ, காங்கிரஸ்க்கு எதிராகவோ, தமிழகத்திற்கு ஆதரவாகவோ குரல் கொடுக்க முடியாமல் தவிக்கிறீர்களா CMsir ? இன்று நடைபெற இருக்கின்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் தாக்கல் செய்யவுள்ள பட்ஜெட் உரை தமிழ்நாட்டில்தான் உள்ளதா ? அல்லது வேளாண் பட்ஜெட் “திருப்பதிக்கு” சென்றது போல் உடுப்பி “மூகாம்பிகை” கோவிலுக்கு சென்று விட்டதா ? இந்த நிர்வாக சீர் கேட்டிற்கு காரணம் உங்களின் நிர்வாக இயலாமை என்பதை உணர்ந்துள்ளீர்களா CM sir ?

இவ்வாறு மு.அப்பாவு தெரிவித்துள்ளார்.

---

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!

